# உண்மையைக் கண்டறிவது மட்டும் போதுமானதல்ல குற்றவாளிகளைத் தண்டிக்க பொறிமுறை அவசியம்!

## மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையிட்டார்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோர்க்கர் டர்க் இலங்கை தொடர்பான தனது வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சம்பவத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென தனது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் புதிய பொறிமுறையொன்றை அரசாங்கம் முன்வைத்துள்ள போதிலும், உண்மையைக் கண்டறிவது மட்டும் போதாது எனவும், குற்றவாளிகளைத் தண்டிக்கப் போதுமான பொறிமுறையை வழங்குவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் உறுதிப்பாடு இருக்க வேண்டும் என்றும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுச் சட்டம் குறித்த பல சரத்துக்கள் தொடர்பாகத் தனது அறிக்கையில் அவர் கவலையை வெளிப்படுத்தியுள்ளார். 2 ➤





மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 19 வியாழக்கிழமை 07.09.2023 கதிர் 67

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

# வடமாகாண ஆளுநர் மாற்றப்படுவார்! சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. தகவல்



வடக்கு மாகாண ஆளுநர் வெகு விரைவில் மாற்றப்படுவார் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐ. நா வதிவிடப் பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இது தொடர்பாகபில் ஊடகங்களுக்கு தகவல் வழங்கும் சந்திப்பின்போதே அவர் அந்த விடயத்தைப் பகிர்ந்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர், நேர்மையான அதிகாரிகளைப் பழிவாங்கும் நோக்கில் பதவியிறக்கும் வகையில் செயல்பட்டு வருகிறார் எனவும், இது தொடர்பாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா?, எனவும் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனவே, வெகுவிரைவில் வடக்கு மாகாண ஆளுநர் மாற்றப்படுவார் என்பது தனது கருத்து எனத் தெரிவித்துள்ளார். (க)

# சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம் தாதிக்கு நீதிமன்று பயணத் தடை விதிப்பு

யாழ்ப்பாணத்தில் 8 வயதுச் சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்படும் தாதியருக்கு யாழ். நீதவான் நீதிமன்று பயணத் தடை விதித்துள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் இடது கையில் "கனுலா" தவறாக பொருத்தப்பட்டதால், கை பாதிப்புக்கு உள்ளான நிலையில் அது மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

அது தொடர்பாகச் சுகாதார அமைச்சு, யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம், வடமாகாண ஆளுநர் ஆகியோரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, சம்பவம் தொடர்பாக வாக்குமூலங்களைப் பதிவு செய்திருந்தினர். 2 ➤

# சனல் – 4 இன் புதிய ஆவணப்படம் வெறும் கட்டுக்கதை என மறுப்பு!

## கோட்டாபய ராஜபக்ச அறிக்கை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பிரித்தானிய தொலைக்காட்சி வலையமைப்பான சனல் - 4 இன் புதிய ஆவணப்படத்தில் தமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மறுத்துள்ளார்.

இந்த காணொளி 2005 ஆம் ஆண்டிலிருந்து ராஜபக்சவுக்கு எதிரான காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு என்றும், அதே சனலில் ஒளிபரப்பப்பட்ட ஏனைய காணொளிகளைப் போலவே கட்டுக்கதை எனவும் அவர் அறிக்கை ஒன்றினை 2 ➤

# கல்வியை வியாபாரப் பண்டமாக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறது!

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

பல்கலைக்கழகத்தில் உள்ள மருத்துமனையில் மருந்துகள், ஆய்வுகூடத்துக்குத் தேவையான கருவிகள், இரசாயனப் பதார்த்தங்கள், கணினிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கோ திருத்துவதற்கோ போதிய நிதி இன்றி பல்கலைக்கழகம் நாளாந்தம் திண்டாடுவதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் 2 ➤




# சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம் உரிய முறையில் விசாரணை நடக்கும்!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் அண்மையில் மருத்துவத் தவறினால் 8 வயதுச் சிறுமியொருவரின் இடது கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய கருத்துத் தெரிவிக்கையில், இந்த விடயத்தில் வைத்தியர்கள் தவறிழைத்திருப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்தியசாலைப் பணிக்குழாமினரால் ஏதேனும் தவறுகள் ஏற்படுமாயின் அதற்கு ஒருபோதும் 2 ➤

# தற்கொலை செய்யும் அளவிற்கு முஸ்லிம்கள் முட்டாள்கள் அல்ல! - சரத் வீரசேகர கருத்து



சிங்களத் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு தற்கொலை செய்யும் அளவிற்கு முஸ்லிம்கள் முட்டாள்கள் அல்ல, என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குல் தொடர்பாக சனல்- 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பாக நாடாளுமன்றில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய அவர், சிங்களத் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு முஸ்லிம் பயங்கரவாதிகள் 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக நடக்கும் வீடமைப்பு மற்றும் கட்டுமானக் கண்காட்சி




இது தொடர்பான தகவல்களை வழங்கும் ஊடகச் சந்திப்பொன்று இன்று யாழ் ரில்கோ விருந்தினர் விடுதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட IYNGARAN MEDIA SOLUTION (PVT) Ltd இன் நிறுவுனர் கார்த்திக் நிகழ்வு தொடர்பான பல விடயங்களைப் பகிர்ந்துகொண்டார்.

கட்டட நிர்மாணத்துறைச் சபைடன் இணைந்து இந்தக் கண்காட்சியை இலங்கையின் முன்னணி விளம்பரப்படுத்தல் மற்றும் தயாரிப்பு நிறுவனமான IYNGARAN MEDIA SOLUTION (PVT) Ltdயின் ஏற்பாட்டில் யாழ் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் 15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் குறித்த கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சியில் இலங்கை மற்றும் சர்வதேச நிறுவனங்கள் பல பங்கேற்கவுள்ளதோடு, துறை சார்ந்த உள்நாட்டின் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், சிறு தொழில் முனைவோர் என அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்பளிக்கும் முகமாகவும் இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்காட்சியில் பங்கேற்க விரும்புவோர் 077 888 2700 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அறியத்தரப்பட்டது. (04)

## சிறுமியின் கை அகற்றப்பட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமளிக்க முடியாது, என்று குறிப்பிட்டுள்ளார்.

இச் சம்பவமானது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், வடமாகாண ஆளுநர், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் பொலிஸாரிடம் சிறுமியின் பெற்றோர் இது குறித்து முறைப்பாடளித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக பல கோணங்களிலும் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

## தற்கொலை செய்யும் அளவிற்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

9 பேரும் கர்ப்பிணித்தாய் ஒருவரும் தற்கொலை செய்துக்கொண்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு முட்டாள்களா நம் நாட்டில் இருக்கின்றார்கள்? என்று தான் என்னால் கேட்க முடியும்.

இந்தத் தாக்குதலுக்கு நல்லாட்சி பொறுப் புக் கூற வேண்டும் என்ற உறுதியில்தான் அன்றும் இன்றும் இருக்கின்றோம்.

இந்தத் தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி சிறை யில் சிரித்துக்கொண்டு இருப்பார், என தெரிவித்துள்ளார். (04)

## கல்வியை வியாபாரப் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் இன்றைய தினம் காலை ஊடக மாநாடு ஒன்றை நடத்தியிருந்தது. இதன்போதே இந்த விடயம் தொடர்பாகப் பேசப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் புதிய கட்டடங்களையும் விடுதிகளையும் அமைப்பதற்கும், பழைய கட்டங்கள் விடுதிகளைத் திருத்துவதற்கும் பல்கலைக்கழத்திடம் நிதி இல்லாத நிலை காணப்படுகிறது.

இதன் காரணமாக இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களின் கல்வித்தரம் குறைவடையும் அபாயம் காணப்படுகிறது.

அரச பல்கலைக்கழகங்களில் நெருக்கடியான நிலையை உருவாக்கி வரும் அரசாங்கம், தனியார் பல்கலைக்கழகங்களையும் கல்வி நிறுவனங்களையும் உருவாக்கும் முயற்சியிலும் கல்வியை ஒரு வியாபாரப் பண்டமாக்கும் வகையிலான கொள்கைகளை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

அது மட்டுமன்றி, உள்நாட்டுக் கடன் மறு சீரமைப்பு என்ற பெயரில் அனைத்து உழைக்கும் மக்களின் ஈ.பி.எஃப் மற்றும் ஈ.ரி.எஃப் கணக்குகளிலும் இருக்கும் பணத்தினைக் கொள்ளையிடும் அரசாங்கத்தின் முயற்சி, கல்வித்துறையின் மீதும் நாட்டின் ஏனைய உழைக்கும் மக்களின் மீதும் விழும் பாரிய அடியாகும், எனவும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக மாணவர்களும் உழைக்கும் வர்க்கத்தினரும் மேற்கொண்டு வரும் போராட்டங்களை நசுக்கும் வகையில், புதிய சட்டங்களையும் அரசாங்கம் உருவாக்க முயற்சிக்கின்றது எனவும் அங்கு குற்றஞ்சாட்டப்பட்டது. (01, க)

## சனல் - 4 இன் புதிய ஆவணப்படம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுப் பதிலளித்துள்ளார்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவை வெற்றிபெறச் செய்யும் முயற்சியில் நாட்டில் பாதுகாப்பின்மையை உருவாக்கும் வகையில் தாக்குதல் திட்டமிடப்பட்டதாகவும், இதற்கு அரச அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் என்றும் சனல் - 4 நிறுவனம் தனது ஆவணப்படத்தில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், 2019 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்காகவே இஸ்லாமியத் தீவிரவாதிகளின் குழு தற்கொலைத் தாக்குதல்களை நடத்



தியதாகக் கூறுவது அபத்தமானது என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2015 இல் பாதுகாப்புச் செயலாளர் பதவியை விட்டு விலகிய பின்னர், 2019 இல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலெயுடன் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் முன்னாள் கோட்டபாய கூறியுள்ளார்.

2016 இல் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இருந்து மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலெ நீக்கப்பட்ட பின்னர், அவர் மீண்டும் அந்த அமைப்பில் பணியாற்றவில்லை. 2018 பெப்ரவரியில் தற்கொலைக் குண்டுதாரிகளைச் சந்தித்தது பற்றிய இந்த கதை ஒரு கட்டுக்கதை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## சிறுமியின் கை அகற்றப்பட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு நடைபெற்ற நிலையில், குறித்த தாதி வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லாதவாறு பயணத்தடை விதிக்க வேண்டும் என சிறுமியின் பெற்றோர் சார்பில் மன்றில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட மன்று, குறித்த தாதிக்கு பயணத் தடை விதித்ததுடன், வழக்கினை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தியும்வைத்தது. (க)

## உண்மையைக் கண்டறிவது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் ஆட்சியில் வரலாற்று ரீதியிலான மாற்றம், கடந்த கால மக்கள் எதிர்ப்புக்களின்போது எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை என்றும், இதன் காரணமாக நீண்டகால சவால்களுக்கு முகம்கொடுப்பது மேலும் தாமதமாகி வருவதாகவும் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை தொடர்ந்தும் பொறுப்புக்கூறல் இன்றி செயற்பட்டு வருவதாகவும், அண்மைக்காலமாக மனித உரிமை மீறல்கள், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்துக் காணப்படுவதாகவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உறுதிப்படுத்துதல், ஊழலுக்கு எதிராக செயற்படுதல் மற்றும் நீதியை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பரிந்துரைகளை அவர் முன்வைத்துள்ளார்.

தீர்க்கமான நிறுவனச் சீர்திருத்தங்கள், பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளில் முன்னேற்றத்தை அடைவதில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கமும் இந்த நாட்டு அரசியல் கட்சிகளும் இதனை அவசரத் தேவையாகக் கருத்தில் கொண்டு செயற்படுமாறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோர்க்கர் டர்க் கோரிக்கை விடுத்துள்ளார். (04)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# ஓய்வு நிலை பொலிஸ் அதிகாரிக்கு கௌரவிப்பு வழங்கும் நிகழ்வு



கிளிநொச்சி மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய குணரத்ன பொலிஸ் சேவையில் இணைந்து 38 வருடங்களாகத் தன்னை முழுமையாக நாட்டு மக்களின் பாதுகாப்பு கடமையில் இணைத்துள்ளதோடு, பல குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பிரதானியாக கடமை புரிந்துள்ளார்.

இவர் தற்போது பொலிஸ் பணியிலிருந்து முற்றுமுழுதாக ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்றைய தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு யாழ் மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி ஹெட்டியாரச்சி கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பொலிஸ் மா அதிபர் சமுத்திர ஜீவன் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர், இராணுவத்தினர் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதைகளை அவர் ஏற்றுக் கொண்ட பின்னர் தனியார் விடுதியில் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (02)



# க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற மாணவன்

(எம்.எப். நவாஸ்)

2022 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் அக்கரைப்பற்று ஸ்ரீ இராம கிருஷ்ணா கல்லூரி மாணவன் பரமானந்தம் தரணிதரன் மருத்துவத் துறைக்கு தெரிவாகியுள்ளார்.

இவர் உயர்தர பரீட்சையில் மூன்று ஏ சித்தியும் பொது ஆங்கிலத்திலும் ஏ சித்தியும் பெற்றிருக்கிறார்.

# வேப்பஞ்சாறு எண்ணெய்க் காப்புச் சாத்துதலுடன் நற்பிட்டிமுனை பத்ரகாளியம்மன் கும்பாபிசேகம்



(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் நற்பிட்டிமுனை ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத்தின் ஓரங்கமாக இன்று வேப்பஞ்சாறுடன் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

புதிய முறையில் வேப்பஞ்சாறு அம்மனுக்கு சாத்தும் நிகழ்வு காலை 7 மணி முதல் நிகழ்வு இடம் பெற்றது.

நாளை 8ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.19 மணி முதல் 10.41மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம் பெற இருக்கின்றது. தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 20ஆம் தேதி 1008 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகம் இடம்பெறும் .

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ஸ்ரீ சு.சுதர்சன் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேக கிரியைகளை தொடர்ந்து மேற்கொள்வார்கள் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# ஜெய விம வீடு காரைதீவில் கையளிப்பு





(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2023 ம் ஆண்டிற்காக நடைமுறைப்படுத்தும் 250000 ரூபா அரச பங்களிப்புடன் புனர்நிர்மானம் செய்யப்பட்ட வீடு (ஜெய விம) காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் அவர்களினால் இன்று திறந்து வைக்கப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம். பார்த்திபன், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys
Aventura
Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI
Chamber of Construction
Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
Digital Media Partner
வீரகேசரி
காலைக்கதிர்
Kalaikkathir

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்



## 16 பேர் உயிரிழப்பு

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று 560 ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உள்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன. அமைதி பேச்சுவார்த்தைக்கு இரு நாடுகளும் உடன்படாத நிலையில் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைனின் டோனட்ஸ்க் மாகாணம் கொஸ்டினிவ்கா நகரில் உள்ள சந்தை பகுதியில் ரஷ்யா இன்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த ஏவுகணை தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர். மேலும், 28 பேர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி ஆண்டனி பிளிங்கன் உக்ரைன் வந்துள்ள நிலையில் இந்த தாக்குதல் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தோனேசிய கடலில் படகு கவிழ்ந்து 4 மீனவர்கள் பலி

இந்தோனேசிய கடலில் படகு கவிழ்ந்த விபத்தில் சிக்கி 4 மீனவர்கள் பலியாகினர். ஜகார்த்தா, இந்தோனேசியாவின் வடக்கு ஜாவா மாகாணம் கிரஜகன் துறைமுகத்தை சேர்ந்த மீனவர்கள் சிலர் மீன்பிடிக்க கடலுக்கு படகில் சென்றனர். பசிபிக் பெருங்கடல் பகுதியில் தங்கியிருந்து வலைவிரித்தப்படி அவர்கள் மீன்பிடித்து கொண்டிருந்தபோது அதிகாலையில் கடல் கொந்தளிப்பு அதிக அளவில் இருந்தது. இதனால் பெரும் அலைகள் எழுப்பி மீனவர்களின் படகினை தாக்கியது.

இதனால் மீனவர்களின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் படகில் இருந்த 27 மீனவர்கள் கடல் அலைகளால் அடித்து செல்லப்பட்டனர். சம்பவம்



குறித்து அறிந்த கடற்படை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர்.

இதில் கடலில் மூழ்கி 4 மீனவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். ஆங்காங்கே தத்தளித்து கொண்டிருந்த மீனவர்கள் சிலர் மீட்கப்பட்டுள்ளனர். கடலில் மாயமாகி காணாமல் போன மீனவர்களை தேடும் பணியில் கடற்படை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.



# அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விபத்து - 4 பேர் பலி

எகிப்தில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர். கெய்ரோ, எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவில் ஹெடிக்யு எல்-கிய்பா என்ற மாவட்டம் உள்ளது. இந்த மாவட்டத்தில் உள்ள 4 அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் இன்று இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் அடுக்குமாடியில் வசித்தவர்கள் பலர் சிக்கிக்கொண்டனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர் இடிபாடுகளுக்குள் சிக்கிவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இந்த கட்டிட விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 5 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெற்றிகரமாக நிலவுக்கு விண்கலம் அனுப்பியது ஜப்பான்



தனேகஷிமா விண்வெளி மையத்தில் இருந்து எச்.2.ஏ. ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது. டோக்கியோ, ஜப்பானின் விண்வெளி ஆய்வு மையம் சார்பில் நிலவை ஆய்வு செய்வதற்கான பயண திட்டம் உருவாக்கப்பட்டது.

இதற்காக "ஸ்லிம்" என்ற விண்கலத்தை ஜப்பான் தயாரித்துள்ளது. இந்த விண்கலத்தை எச்.2.ஏ. ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் திட்டமிட்டது. இந்த திட்டம் பல்வேறு காரணங்களால் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று ஜப்பான் நாட்டின் தென்மேற்கே ககோஷிமா மாகாணத்தில் உள்ள தனேகஷிமா விண்வெளி மையத்தில் இருந்து எச்.2. ஏ. ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது. இந்த விண்கலம் அடுத்த ஆண்டு துவக்கத்தில் நிலவில் தரையிறங்கும் என ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த திட்டம் வெற்றி பெற்றால், நிலவை ஆய்வு செய்வதற்கான திட்டத்தில் வெற்றி பெற்ற உலகின் 5ஆவது நாடாக ஜப்பான் திகழும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக வளர்ச்சியில் 'ஆசியான்' அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது - பிரதமர் மோடி



ஆசியான் அமைப்பில் அனைவரின் குரலும் கேட்கப்படுகிறது என்று பிரதமர் மோடி தெரிவித்தார். ஜகார்தா, இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவில் 20ஆவது ஆசியான்-இந்தியா மாநாடு இன்று நடைபெறுகிறது. இதேபோன்று, 18ஆவது கிழக்காசிய உச்சி மாநாடும் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்பதற்காக இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ அழைப்பின் பேரில் பிரதமர் மோடி அந்நாட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு ஜகார்தாவில் நடைபெற்ற ஆசியான்-இந்தியா மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, "இந்த ஆண்டுக்கான கருப்பொருள் ஆசியான் -வளர்ச்சியின் மையம் என்பதாகும். ஆசியான் அமைப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இங்கு அனைவரின் குரலும் கேட்கப்படுகிறது. ஆசியான் வளர்ச்சியின் மையமாக உள்ளது. ஆசியான் அமைப்பு உலக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது" என்று தெரிவித்தார்.

# நீல வானுக்கான தூய்மையான காற்று தினம் பாடசாலைகளில் அனுஷ்டிப்பு





தூய்மையான காற்றானது ஒவ்வொரு உயிரினத் தினதும் அடிப்படைத் தேவையாகும்.இன்று வளி மாசடைவதினால் உலக சனத்தொகையின் 99 வீதத் திற்கு மேலானவர்கள் பாதுகாப்பற்ற வளியையே சுவாசிப்பதாக உலக சுகாதார நிறுவன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

உலகெங்கிலும் ஒவ்வொரு வருடமும் சுமார் 7 மில்லியன் மக்கள் வளி மாசடைவதால் உயிரிழப்பதா-கவும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை மனங்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் நீல வானுக்கான தூய்மையான காற்று தொடர்பான சர்வதேச தினம் கொண்டாடப்படுகிறது.

இதற்கமைவாக கல்வி அமைச்சு இம்மாதம் இடம் பெறும் சர்வதேச தினங்களான தூய்மையான காற்று தொடர்பான சர்வதேச தினம் ( செப்டெம்பர்-7), உலக ஓசோன் தினம் (செப்டெம்பர்-16)

ஆகியவற்றை பாடசாலைகளில் கொண்டாடி மாண வர் மத்தியில் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைவாக வலிகாமம் கல்வி வலயத்திற்குட் பட்ட பாடசாலைகளில் இத்தினங்களைக் கொண்டாடு வதற்கான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதன்படி யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத் தில் புவியியல் பாட ஆசிரிய ஆலோசகர் க.சிவகரன் தூய் மையான காற்று தொடர்பான சர்வதேச தினம் பற்றிய விழிப்புணரவை மாணவர் மத்தியில் ஏற்படுத்தினார்.

இதே போல் யா/ வட்டு இந்துக் கல்லூரியிலும் பாட சாலை சுற்றாடல் கழக மாணவர்களால் இன்றயதினம் (செப்டெம்பர் 7) இத்தினத்தை பற்றியும், தூய வளியை பெறல் தொடர்பாகவும் சகல மாணவருக்கும் விழிப்பு ணர்வு ஏற்படுத்தப்பட்டது. (02)



# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பின் தங்கிய கிராமங்களான ஆலங்குளம் மற்றும் சம்புநகர் மக்களுக்காக மட்டக்களப்பு மிசேரியோ நிறு வனத்தினால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் மற்றும் உலர் உணர்வு பொருட்கள் என்பவற்றை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபீர் இன்று வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர், நிர்வாக உத்தியோகத்தர் கே வி. சலீம், நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஏ எல். ஜௌபர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆர் எம். முஸாதிக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை வலய மாணவருக்கான மெய்வல்லுனர் பயிற்சி முகாம் ஆரம்பம்





(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய இருநாள் மெய்வல்லுனர் பயிற்சி முகாம் இன்று வியாழக்கிழமை மஜித்புரம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.நசீர் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.வை.யசீர் அறபாத் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அப்துல் மஜீத், உதவிக் கல்விப் பணிப்பாளர்க ளான வீ.ரி.சகாதேவராஜா, ஏ.முஸ்ரக் அலி ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் இந்த மெய்வல்லுனர் பயிற்சி முகாம் நேற்றும் இன்றும் நடைபெறுகிறது.

எதிர்வரும் 19ஆம் தேதி மாகாணமட்ட விளை யாட்டு போட்டிக்கு தயார்படுத்தும் முகமாக இம்முகாம் ஏற்படுத்தப்பட்டது .

இதன் துவக்க விழாவில் விளையாட்டு ஆரோக் கிய தொடர்பான சிறப்புரையை வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்த பிரதான உரையை பிரதம அதிதி அறபாத் நிகழ்த்தினார்.

நன்றி உரையை வித்தியாலய அதிபர் எம்.முஸ ம்மில் நிகழ்த்தினார். மாவட்ட பயிற்றுவிப்பார்களான தாஜுடின், றிபாஸ் ஆகியோர் பயிற்சி வழங்கினார் கள்.



# போலி மதுபானப் போத்தல்கள் விடயம் குற்றப்புலனாய்வுச் சட்டத்தினூடாகவே

## விசாரிக்கவேண்டும் - சஜித் கோரிக்கை



போலி மதுபானப் போத்தல்கள் விடயத்தில் காணப்படும் அரசியல் தலையீடுகள் குறித்து குற்றப்புலனாய்வுச் சட்டத்தின் ஊடாகவே பரீசீலனை செய்யப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இவ்விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

போலி ஸ்டிகர்கள் பதித்த பாதுகாப்பற்ற எத்தனை மதுபானப் போத்தல்கள் இறைவரித் திணைக்களத் தினால் கைப்பற்றப்பட்டுள்ளன? என்று அவர் கேள்வியெழுப்பினார்.

2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மூன்றாம் வாரத்தில் நூற்றுக்கும் அதிகமான விற்பனை நிலையங்கள் இவ்வாறு கண்டறியப்பட்டன. சுமார் ஒரு இலட்சம் போலி ஸ்டிகர்களுடனான மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

கைப்பற்றப்பட்டுள்ள அனைத்து போலி ஸ்டிகர்கள் பதிக்கப்பட்ட மதுபானப் போத்தல்களும் ராஜகிரியவில் அமைந்துள்ள பிரதான காரியாலத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம், இந்த போலியான ஸ்டிகர்களை மறைத்து தவறாக அச்சிடப்பட்ட ஸ்டிகர்கள் என காண்பிக்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தப் போலியான மதுபானப் போத்தல்கள் உரிய கணக்கெடுப்பின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையால் இதனை விடுவிக்க முடியும் என இறைவரித் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

வங்குரோத்து அடைந்து அரச வருமானம் வீழ்ச்சியடைந்துள்ள ஒரு நாட்டில் இவ்வாறாகவா செயற்படுவது? என்று கேட்க விரும்புகின்றேன்.

இது இறைவரிச் சட்டம் மூலம் பரீசீலனை செய்யப்படக் கூடாது. குற்றப்புலனாய்வுச் சட்டம் ஊடாகவே பரீசீலனை செய்யப்பட வேண்டும்.

இந்த நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்த விடயத்தை மூடி மறைக்கும் செயற்பாடுகளில் தற்போது ஈடுப்பட்ட வருகின்றனர், என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (04)




## வேரவில் இந்து மகா வித்தியாலயத்திற்கு ஆசிரியர்களை நியமிக்கக்கோரிக்கை பெற்றோர்கள் கதவடைப்புப் போராட்டம்



கிளிநொச்சி பூநகரி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவிற்கு போதிய ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி மாணவர்களின் பெற்றோர்கள் இன்று பகல் பாடசாலையை மூடி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பூநகரி கல்விக்கோட்டத்தின் கீழ் உள்ள மிகவும் பழமை வாய்ந்த பாடசாலையான வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விப் பிரிவுக்கான போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகவத் தெரிவித்த அவர்கள், குறித்த பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி இன்று காலை 7 மணிமுதல் பாடசாலையின் நுழைவாயிலை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆரம்ப பிரிவில் 79 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில் மூன்று ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் மேலும் இரண்டு ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாகவும் குறித்த வெற்றிடத்திற்கு ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிக்குமாறும். குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (02)

## ஹரின் மற்றும் மனுச ஆகியோரிடம் வாக்குமூலம் பெற வேண்டுமாம்!

### டிலான் பெரேரா அறிவுறுத்தல்

சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பாக அமைச்சர்களான ஹறின் பெர்னாண்டோ மற்றும் மனுச நாணயக்கார ஆகியோரிடமும் வாக்குமூலங்களைப் பெறவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குல் குறித்து சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பாக நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 வெளியிட்டு காணொளியில் உள்ள அதிகமான விடயங்களை தற்போது ஆளும் தரப்பில் உள்ள இரண்டு அமைச்சர்கள் முன்னதாகவே நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்கள்.

ஹறின் பெர்னான்டோ மற்றும் மனுச நாணயக்கார ஆகியோர் இந்த விடயங்களை முன்வைத்திருந்தார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் இவ்வாறான ஆயத்தம் நடக்கின்றது என்பது குறித்து சில வருடங்களுக்கு முன்னர் ஆளும் தரப்பிலுள்ள அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கூறியிருந்தார்.

இதற்குத் தொடர்புடையவர் என கூறப்படும் பிள்ளையானும் தற்போது ஆளும் கட்சியிலேயே இருக்கின்றார்.

இவர்கள் நால்வரிடமும் இந்தத் தாக்குதல் தொடர்பான வாக்குமூலங்களைப் பெற்று நாட்டிற்கு அறிவிக்க வேண்டும், என அவர் தெரிவித்துள்ளார். (04)

## செவ்வாய்க்கு விண்கலம் தயார்!

மனிதர்களை செவ்வாய்க் கிரகத்திற்கு அழைத்துச் செல்லும் விண்கலம் தயாராக உள்ளதாக எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஸ்டார்ஷிப் என்ற இந்த விண்கலத்தை குறித்த நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த விண்கலம், மனிதர்களை நிலவு, செவ்வாய் போன்ற கிரகங்களுக்கு அழைத்துச் செல்ல உருவாக்கப்பட்டதாகும்.

25 முதல் 30 மாடி உயரம் கொண்ட இந்த விண்கலம், 120 தொன் எடை கொண்டதாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2023இல் வெளியிடப்பெற்றது.